சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - திருமதி.இ.சக்திகனி த/பெ (லேட்) திரு.எஸ்.இரட்டை முத்து, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் - பணிவரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப-7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது மார்கழி மாதம் 10-ம் நாள்

அரசாணை (டி) எண்.726 நாள்: 26.12.2023

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 10.12.2014.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
3. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடித ந.க.எண்.13164/ஆர்3/2009, நாள் 23.09.2022.

*****

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடிதத்தில், தூத்துக்குடி மண்டலம், ஆனந்தபுரம், கால்நடை கிளை நிலையத்தில், கால்நடை ஆய்வாளர் நிலை-1 ஆக பணியிலிருக்கும்போது 12.12.2006 அன்று மறைந்த திரு.எஸ்.இரட்டைமுத்து என்பவரது வாரிசுதாரரான திருமதி.இ.சக்திகனி என்பவருக்கு கருணை அடிப்படையில் தூத்துக்குடி மண்டலம், திருச்செந்தூர் (கா.ப) உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 06.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள் /சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும் எனவே தனியரது பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 06.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தூத்துக்குடி மண்டலம், ஆனந்தபுரம் கால்நடை கிளை நிலையத்தில் கால்நடை ஆய்வாளர் நிலை-1ஆக பணியிலிருக்கும்போது 12.12.2006 அன்று மறைந்த திரு.எஸ்.இரட்டை முத்து என்பவரது வாரிசுதாரரான திருமதி.இ.சக்திகனி என்பவருக்கு கருணை அடிப்படையில் தூத்துக்குடி மண்டலம், திருச்செந்தூர் (காப) உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, அவர் 06.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் (15.10.2008) 18 வயதினைப் பூர்த்தி செய்யவில்லை என்றும் மேற்படி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 16 ஆண்டுகள், 3 மாதங்கள், 3 நாட்கள் ஆகும் (தனியரின் பிறந்த தேதி– 12.07.1992) என்றும்